முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 06.07.2026

O.S No.204/2022

வா.சா.2- ராதாகிருஷ்ணன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியாது. நான் வாதியின் உறவினரா என்றால் இல்லை நண்பர். இதற்கு முன்பாக உரிமையியல் வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இதற்கு முன்பாக உரிமையியல் வழக்கில் வாதி குடும்பத்திற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அருகே எனக்கு வீடோ சொத்துக்களோ இல்லை. வழக்கு சம்பந்தமான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் எல்லைகல்போடுவதற்காக கேட்டுள்ளார்கள். வழக்குரையை நான் படிக்கவில்லை. வாதிக்கு எந்த ஆவணத்தின் படி வழக்கு சொத்து உரிமைபட்டது என்றால் ஆவணம் எனக்கு தெரியாது பூர்வீக வகைபடி பேரனுக்கு தற்போது சொத்து பாத்தியம்.

2. மேற்படி விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வழக்கு பூமிக்கு சற்று அருகில் எங்களுக்கு பூமி உள்ளது வாதி குடும்பத்தில் நடக்கும் பெரும்பாலான விசயங்கள் எங்களுக்கு தெரியும். இந்த வழக்கில் வாதி எவ்வளவு சொத்தை சேர்த்துள்ளார் என்றால் 85 சென்ட் ஆகும். அந்த 85 சென்ட் என்பது 1 ஏக்கர் 36 ¾ சென்ட்டின் ஒரு பகுதி என்றால் சரி. இதேபோன்று 1 ஏக்கர் 36 ¾ சென்ட்டில் பிரதியின் தாத்தா அனஞ்சபெருமாளுக்கு உரிமை இருந்தது என்றால் சரி. பிரதியின் சொத்தில் வாதிகளுக்கு எந்த கோரிக்கையும் இல்லை என்றால் சரி. 1 ஏக்கர் 36 ¾ சென்ட் என்பது ஒரே கண்டமாக இல்லை என்றால் சரி. 4 தட்டுகளாக உள்ளது. 4 தட்டுகளுக்கும் வெவ்வேறு எல்லைகள் உண்டு என்றால் சரி.

3. பால்நாடாருக்கு 3 பிள்ளைகள் துரை, ராணி, பாமா ஆவர். பாமாவுக்கு பிள்ளைகள் இல்லை.பாமா பிரசவ காலத்தில் இறந்து விட்டார். பாமாவுக்கு சிவமுருகன் என்ற குழந்தை உண்டு என்றால் தெரியாது. பால்நாடாரின் வாரிசு சான்றிதழை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதனை பார்த்தால் பால்நாடாரின் வாரிசு பற்றி தெரிய வரும் என்றால் சரி. பால்நாடாருக்கு பாகபிரிவினை ஆவணத்தில் எவ்வளவு பரப்பளவு என்பது குறிப்பிடபடவில்லை என்றால் எனக்கு தெரியாது. பால்நாடாரின் சொத்து அவரது அனைத்து வாரிசுகளுக்கும் கிடைக்க வேண்டும் என்றால் சரி. ராணி என்பவர் துரைபெயருக்கு எழுதி கொடுத்த விடுதலைஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அந்த விடுதலை ஆவணத்தில் விஸ்தீரணங்களை குறிப்பிட்டு அதனின் முன்ஆவணங்களின் எதிராக எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. முன்ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்திற்கு தான் ஆவணம் எழுதவேண்டும் என்றால் சரி.

4. 1 ஏக்கர் 36 ¾ சென்ட்டில் வாதி ஒரு பகுதியை கிரயம்கொடுத்து விட்டார் என்றால் சரி. வாதி சொத்தின் தெற்கே பிரதியின் சொத்து உள்ளது என்றாலும் அது பிரதியின் கைவச அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரி. முன்வழக்கு எண் அ,வ,எண்.248/2005 வழக்கின் விவரங்கள் மேல்முறையீட்டு வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் முழுமையாக எனக்கு தெரியாது வாதி சொல்லி அவை தள்ளுபடி ஆன விவரத்தை தெரிந்து கொண்டேன். நான் அந்த வழக்கின் தீர்ப்பு தீர்ப்பாணைகளை பார்த்ததில்லை. வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்துக்களை பிரிப்பதற்கு முள்வேலி இருப்பதாக நான் சொல்லியதை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். முள்வேலி தற்போது ஸ்தலத்தில் இல்லை என்றால் சரி.

5. வழக்கு சொத்தை அளவீடு செய்தபோது நான் பார்த்தேனா என்றால் இல்லை ஆணையர் அளவீடு செய்தபோது பார்த்தேன். வாதி மற்றும் பிரதியின் சொத்துக்கள் மொத்த சொத்தான 10 ஏக்கர் 95 சென்ட்டில் ஒரு பகுதி என்றால் சரி. நீதிமன்ற ஆணையர் 10 ஏக்கர் 95 சென்ட்டை அளந்தாரா என்றால் இல்லை. வாதியின் 1 ஏக்கர் 36 3/ 4 சென்ட்டை அளந்தபோது பிரதியின் 1 ஏக்கர் 36 ¾ சென்ட்டை ஆணையர் அளந்தாரா என்றால் இல்லை. கொஞ்சம் கொஞ்சம் அளந்தார். ஆணையர் அளந்தபோது வாதியின் சார்பாக நான் இருந்தேன் என்றால் வாதிக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் இருந்தேன். ஆணையர் 1 ஏக்கர் 36 ¾ சென்ட்டை அளந்து எல்லை நிர்ணயம் செய்தாரா என்றால் இல்லை. பிரதியின்1 ஏக்கர் 36 ¾ சென்ட்டை அளந்து எல்லை நிர்ணயம் செய்தாரா என்றால் இல்லை.

6. வாதி மற்றும் பிரதிவாதி கிரயம் கொடுத்த இடத்தை ஆணையர் அளந்தாரா என்றால் இல்லை. கிரயம் பெற்ற நபர்கள் பென்சிங் அமைத்து விட்டார்கள். முள்வேலி இருந்த இடத்தை ஆணையர் அளந்தாரா என்றால் தனியாக அளக்கவில்லை மொத்தமாக அளந்தார். முள்வேலி இருந்த இடத்தில் எல்லை நிர்ணயம் செய்தாரா என்றால் இல்லை. அந்த இடத்தில் பிரதி மற்றும் வாதியின் இடம் பிரியாததால் எல்லை நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரி. ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்க்கவில்லை. மொத்த 10 ஏக்கர் 95 சென்ட்டை அளக்காமல் வாதி மற்றும் பிரதியின் சொத்தை நிர்ணயம் செய்ய முடியாது என்றால் சரி. தாவா சர்வே எண் சொத்தில் பிரதிக்கு 63 சென்ட்டும் அவரது மைத்துனருக்கு 23 சென்ட்டும் கொடுத்தற்கு ஆவணம் உள்ளதா என்றால் கொடுத்த விவரம் தெரியும். செவி வழிகேள்வி மட்டுமே, நேரடியாக தெரியாது. ஆவணத்தை பார்த்ததில்லை. வழக்கு சொத்து வருவாய் துறை அலுவலகத்தின் மூலம் அளவீடு செய்யபட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் பிறர் சொல்லி கேள்வி பட்டது மட்டுமே எனக்கு நேரடியாக தெரியாது.

7. தாவா சொத்திற்கான பட்டாவில் உள்ள அனைவருக்கும் அந்த சொத்தில் உரிமை

உண்டு என்றால் சரி. மீதம் உள்ள பட்டாதாரர் சொத்தும் 10 ஏக்கர் 95 சென்ட்டில் அடங்கும் என்றால் சரி. தாவா சொத்தின் நடுவில் வாய்கால் செல்கிறது என்றால் சரி. ஆணையர் மேற்படி வாய்காலை அடையாளபடுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. அவர் பார்த்தார். எழுதினாரா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி வாதி சொல்வது போல் முள்வேலியை நாசம் செய்யவில்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யபடதக்கது என்றாலும் சரியல்ல.

**வாதி தரப்பில் மறுவிசாரணை**

பிரசவத்தில் இறந்தது ராணியா பாமாவா என்றால் பாமா.